சுருக்கம்

பணியமைப்பு – மதுரை மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் (JNNURM) – பொதுப்பணித்துறையிலிருந்து அயற்பணியில் பொறியாளர்களை பணியிலமர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை

அரசாணை (ப) எண். 17 நாள்:9.1.2008

படிக்கப்பட்டது

1. அரசாணை (2ப) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.6.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–5 கடித ந.க.எண்.12550/2006/மாநஅ4 நாள் 22.12.2007.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஜவஉறர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்திற்காக மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு கீழ்க்காணும் பொறியாளர் பணியிடங்கள் இரண்டாண்டுகளுக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண். | பதவியின் பெயர் | தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மதுரை மாநகராட்சி | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 |
| 2. | செயற்பொறியாளர் | 2 | 2 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 4 | 4 |
| 4. | உதவிப்பொறியாளர்/இளநிலை பொறியாளர் | 8 | 8 |
| 5. | வரைவு அலுவலர் | 4 | 4 |
| 6. | தொழில்நுட்ப உதவியாளர் | 16 | 16 |

2. தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணி விதிகள்,1996–ல் விதி 6–ன் படி, இவ்விதிகளிலுள்ள பணியிடங்களுக்கு பதவியுயர்வு தெரிவு முறைப்படி மேற்கொள்ள வேண்டும். இப்பணியிடங்களுக்கு மாநகராட்சியில் தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாத நிலையில் மட்டுமே அயற்பணியில் பணியிலமர்த்தப்பட வேண்டும். மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாததால் இப்பணியிடங்களை அயற்பணி அடிப்படையில் பூர்த்தி செய்யுமாறு அம்மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் கேட்டுள்ளனர்.

3. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறையில் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளராக பணியாற்றும் மூன்று நபர்கள் மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் அயற்பணியில் பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அவர்களது விருப்பத்தினை மதுரை மாநகராட்சி ஆணையாளர் அனுப்பி வைத்துள்ளதாகவும், இதற்கேற்ப, கீழ்க்காணும் பணி மாறுதல்களை அயற்பணி அடிப்படையில் மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்:

| வ. எண் | பொறியாளரின் பெயர் மற்றும் பதவி திரு | தற்போது பணிபுரியும் இடம் | அயற்பணி அடிப்படையில் பணியில்அமர்த்தப்பட வேண்டிய பணியிடம் மற்றும் மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | திரு ஆர். ராஜாமணி, செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை | சிவகங்கை | செயற்பொறியாளர், மதுரை மாநகராட்சி |
| 2. | திரு எம். ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை | தேனி | உதவி செயற்பொறியாளர், மதுரை மாநகராட்சி |
| 3. | திரு கே. ராஜகோபால், உதவிப்பொறியாளர், பொதுப்பணித்துறை | திருப்பத்தூர் | உதவிப்பொறியாளர், மதுரை மாநகராட்சி |

4. ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்திற்காக பொதுப்பணித்துறையிலிருந்து மூன்று பொறியாளர்களை அயற்பணியில் மதுரை மாநகராட்சியில் பணியில்அமர்த்தக்கோரும் மேலே பத்தி மூன்றில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குபின், நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே.தீனபந்து
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–5.
ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, குறளகம், சென்னை–108.
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அ.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்